Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 440/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | தண்டபாணி |
| Father's Name | | காளியப்பன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 06th October 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1 (died) A2 present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கொண்டேகவுண்டன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். நான் நெகமத்தில் கல்லங்காடு தோட்டம் ஒன்றை வாங்கி அனுபவித்துவருகிறேன். மேற்படி தோட்டத்தில் நடராஜ் மற்றும் கருப்புசாமி ஆகியோர் தினந்தோரும் பிரச்சனை செய்வது வழக்கம். கடந்த 03.04.2018 ம் தேதியன்று மதியம் 3 மணியளவில் நடராஜ் தனது இரு சக்கர வாகனத்தை என்னுடைய தோட்டத்தில் நிறுத்தினார். நான் நிறுத்த வேண்டாம் என்று கூறினேன். அதற்கு அவர் அப்படித்தான் நிறுத்துவேன் என்றும் உங்க ஆத்தா, அம்மா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்.

பின்னர் என் சட்டையைப் பிடித்து கிழித்தார். நடராஜ் என்னைப் பிடித்துக்கொள்ள அவரது மகன் கருப்புசாமி கட்டையால் இடது கை தோள்பட்டை மற்றும் கைகளில் அடித்தார். கருப்புசாமி கல்லால் எனது வலது கையில் அடித்தார். எங்கிருந்தாலும் உன்னுடைய உயில் என் கையால்தான் போகும் என்று மிரட்டினார். என் தோட்டத்தில் வேலை செய்துவந்த சரஸ்வதி, முத்துசாமி, திருமலைச்சாமி ஆகியோர் அங்கு வந்தவுடன் இருவரும் இரு சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டுச் சென்றனர்.

எனக்கு இதனால் மிகவும் அவமானமாகிவிட்டது. சம்பவம் குறித்து நான் காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு பின்பு மருத்துவமனைக்குச் சென்றேன். நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தனர். மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அசாஆ 1** ஆகும். ஆஜர் எதிரியின் பெயர் கருப்புசாமி ஆகும். அவரது அப்பா பெயர் நடராஜ் ஆகும். ஆஜர் எதிரியும் அவரது தந்தையாரும்தான் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் ஆவார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்றே நான் காவல்நிலையத்தில் புகார் அளித்துவிட்டு அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காகச் சென்றேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான் சென்று தகவல் கூறிவிட்டு மருத்துவமனை சென்றுவிட்டேன். சம்பவ இடமான தோட்டம் நான் புதியதாக வாங்கியது என்றால் சரிதான். சின்னத்துரைதான் எனக்கு தோட்டத்தை வாங்கிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

எதிரிகளின் பூமி என் தோட்டத்திற்கு மேபுறம் உள்ளது. எனக்கு முன்பாக சுமார் 15 வருடங்களுக்கு முன்னால் எதிரிகள் விவசாயம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகளுக்கு எங்கள் பூமி வழியாகத்தான் அவர்கள் தோட்டத்திற்கு தடம் உள்ளது என்றால்

இல்லை. நான் வாங்குவதற்கு முன்பாக எதிரிகள் என் பூமி வழியாக சென்றுகொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல, வேறு வழி இருக்கலாம். எதிரிகள் பரம்பரையாக நான் தோட்டத்தை வாங்குவதற்கு முன்பிருந்தே என் தோட்டம் வழியாகத்தான் சென்றுகொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல.

தட பாத்தியம் குறித்து நாக் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. எதிரிகள் போகும் தடத்தில் நான் முள்ளைப் போட்டு அடைத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் முள்ளை எடுத்துவிட்டுச் சென்றதால்தான் நான் பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. நெகமத்தில் இருந்து பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சுமார் 15 கி.மீ இருக்கும். என் ஊரில் இருந்து பொள்ளாச்சிக்கு 1 மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். நான் இரவு 7 மணிக்கு அரசு மருத்துவமனைக்குச் சென்றேன் என்றால் சரியல்ல, நான் 7 மணிக்கு முன்னரே சென்றுவிட்டேன்.

போலிசார் சம்பவத்திற்கு மறுநாள்தான் அரசு மருத்துவமனைக்கு வந்து காலை 11 மணிக்கு என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். நான் மருத்துவரிடம் யார் யார் என்னைத் தாக்கினார்கள், எப்படி தாக்கினார்கள் என்ற விபரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல, நான் கூறினேன். நான் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தால் மருத்துவரிடம் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு என்னுடன் செல்வராஜ் என்பவர் வந்தார். அவர் ஆவல்பட்டியைச் சேர்ந்தவர்.

சம்பவ இடத்தை போலிசாருக்கு யார் காண்பித்தார்கள், என்ன கைபற்றினார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து மீண்டும் 4 நாட்கள் கழித்து காவல்நிலையத்திற்கு நான் சென்றேன் என்றால் சரிதான், என்னுடன் முத்துசாமி, சரஸ்வதி, திருமலைசாமி, சின்னத்துரை, செல்வராஜ் ஆகியோர் வந்தார்கள். அப்போது போலிசார் விசாரித்தனர். அவர்களிடம் கையொப்பம் வாங்கினார்களா என்று எனக்குத் தெரியாது. எனக்கு ஏற்பட்டது சிறிய காயம் என்றால் சரிதான், எனக்கு தோள்பட்டை, முழங்கை, இடது கை, வலது கை ஆகியவற்றில் தடியால் மற்றும் கற்களால் அடித்தார்கள் என்றால் சரிதான். எனக்கு எந்த அடியும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 3, 4 நாட்கள் மருத்துவமனையில் இருந்து சிகிச்சைப் பெற்றேன்.

எதிரிகள் என்னை அடிக்கடி தொந்தரவுசெய்தார்கள் என்றால் சரிதான். இது சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் நான் பொறுமையாக இருந்து அவர்களிடம் எடுத்துச் சொல்லிப்பார்த்தேன். தடம் இல்லை எனக் கூறி உரிமையியல் வழக்கு தொடுத்தேனா என்றால் இல்லை, பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தது. எதிரிகள் தடப்பாத்தியத்தைத் தடுப்பதற்காகத்தான் நான் பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன சம்பவம்

நடக்கவில்லை என்றாலும் எதிரிகள் என்னை அடித்ததாகவும் , திட்டியதாகவும் கூறியது பொய் என்றாலும் எதிரிகளின் மீது பொய்யாக புகார் புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உரிமையியல் வழக்குத் தொடுத்தால் பாதிப்பு ஏற்படும் என்பதற்காக இந்த வழக்கினை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வேண்டியவர்களை சாட்சியாக சேர்த்து வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதான சாலையில் இருந்து சுமார் 500 அடி தள்ளி சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.